**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.838/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | மீஹா, வயது 47 |
| Father Name/Husband Name | : | ராமசுவாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of July 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

<u>**முதல் விசாரணை**</u>

1 நான் தற்போது கோவில்பட்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 04.09.2025 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு த.கா பாலகுருநாதன், த.கா சுமித்ரா, தலைமை காவலர் மாரியம்மாள் ஆகியோர் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து தீத்தாம்பட்டி பகுதியில் ரோந்து செய்து வரும் போது எதிரியின் வீட்டு முன்பு இருந்த நபர் போலீஸ் பார்டியை கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த அய்யப்பன், வயது 66, த.பெ சித்தவன் என்பவர் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்குபையை சோதனை செய்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Honiey day deluxe brandy பாட்டில்கள் 26 எண்ணம் வைத்திருந்ததை 08.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றி நிலையம் 09.00 மணிக்கு வந்து நிலையகுற்ற எண். 90/2025, சட்டபிரிவு 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் முருகதாஸ் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், நீதிமன்றம் மூலம் தடய அறிவியல் ஆய்வாளர்

அவர்களுக்கு அனுப்பியும், இவ்வழக்கில் சம்பவம் உண்மை என புலனனாதால் எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்து நிலைய பிணையில் விடுவித்து 19.09.2025 ஆம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எதிரி மீது 23 முன்வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. **(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும் மற்றும் சுமார் 180 ML அளவு கொண்ட Honiey day deluxe brandy பாட்டில்கள் 26 எண்ணம் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2 காவலர்கள் ரோந்து செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் இவ்வழக்கு சம்பந்தமாக காலை 06.00 மணிக்கு ரோந்து சென்றார்கள். அத்தாட்சியில் இவ்வழக்கு கைப்பற்றப்பட்ட நேரம் 07.00 மணி என்று எழுதப்பட்டு 08.00 மணி திருத்தப்பட்டுள்ளது என்றால் எழுத்துப்பிழையால் சரி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தனிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டடுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை, அத்தாட்சி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் தனிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் அத்தாட்சியை தனிஅறிக்கையாக சொல்லியுள்ளார்.

3 இந்த வழக்கில் பொது இடத்தில் வைத்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்டதாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான், அரசு அனுமதித்தத அளவைவிட அதிகமாக எதிரி மதுபாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரியின் வீட்டின் அருகே வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்டதாக உள்ள நிலையில் தனிநபர்கள் சாட்சியாக இல்லை என்றால் சரிதான், அவர்கள் சாட்சியாக முன்வராமல் முகவரி கொடுக்காமல் கலைந்து சென்றுவிட்டார்கள், அதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

4 ரோந்து சென்ற காவலர்களின் பாக்கெட் டைரி இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், பாக்கெட் டைரியானது அவர்களது அன்றாட பணிகளை குறிப்பதற்காக நிலையத்தில் உள்ளது. போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றபோது தனிநபர்கள் மதுபாட்டில்களை வாங்கி கொண்டிருந்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான், விற்பனைக்காக வைத்திருந்ததாக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

5 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.